**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 135/2013

நாள்: 06.03.2026

பெயர்: இளங்கோவன் த/பெ: முத்துபிள்ளை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

**1.** எனக்கு ராஜாமணி மனைவி ரேவதியை தெரியுமா என்றால் தெரியும். நானும் அவரும் ஒரே இனத்தை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. நான் கார்காத்த வெள்ளாளர். ரேவதி எந்த வகுப்பை சார்ந்தவர் என்பது தெரியாது. வழக்கு சொத்து எனக்கு தெரியும். அதில் குமார் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வீடு குமார் கட்டியது என்று சொன்னால் சரியல்ல. ராஜாமணி கட்டியது. குமார் வெளிநாட்டில் வேலையில் இருந்தாரா என்றால் இருந்தார். குமார் வெளிநாட்டில் இருந்து வேலை செய்து தனது குடும்பத்திற்கு பணம் அனுப்பினாரா என்றால் அதை குறித்து எனக்கு தெரியாது. அவர் அனுப்பிய பணத்தைத வைத்து தான் ராஜாமணி தனது மூத்த மகளுக்கு திருமணம் செய்து வைத்தாரா என்றால் அவர் குடும்பத்தில் பணம் அனுப்பதியது சம்ந்தமாக மட்டும் தெரியாது. ராஜாமணி என்பவர் எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் டீக்கடை வைத்திருந்ததால் தெரியும்.

2. உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் நடராஜன் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. அது எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் காலை 10 மணிக்கு மேல் எழுதப்பட்டது. உயிலை யார் எழுதினார்கள் என்றால் ராஜாமணி சொல்ல சொல்ல வழக்கறிஞர் நடராஜன் எழுதினார். அந்த உயில் பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்பது குறித்து எனக்கு தெரியாது. உயிலை எழுதும் போது ஆதரவுகளை வைத்து எழுதினாரா என்றால் எனக்கு தெரியாது. ராஜாமணி கையில் ஏதோ பேப்பர் வைத்திருந்தார். உயிலில் குறிப்பிட்ட சொத்து குமார் வாங்கியது என்று சொன்னார் சரியல்ல. அது ராஜாமணி வாங்கியது. ராஜாமணி பேரில் வாங்கிய சொத்து என ராஜாமணி கூறினார். அந்த

சொத்திற்கு தற்போது யார் பேரில் பட்டா உள்ளது என்று தெரியாது. அந்த உயிலில் கண்ட சொத்துக்கள் ராஜாமணி பெயரில் ஆதரவு இல்லாத காரணத்தினால் அந்த உயிலை பதிவு செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. உயில் எழுதப்படும் பொழுது வழக்கு குறித்து ராஜாமணி ஏதேனும் கூறினாரா என்றால் வழக்கு உள்ளது என்று கூறினார்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஒப்பம்/-இளங்கோவன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/-S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்